உ

"அன்னவர்க்கே சரண்"

KAMBAN eNews

கம்ப மடல்

அவுஸ்திரேலியக் கம்பன் கழகம்
Kamban Kazhagam Australia

ஏப்பிரல் மடல் | April 2019

அன்பானவர்களுக்கு, கழகத்தாரின் இனிய வணக்கங்கள்!

அவுஸ்திரேலியக் கம்பன் கழகத்தின் தலைவராகச் சேவையாற்றக் கிடைத்த வாய்ப்பை எண்ணி பெருமையும் புளகாங்கிதமும் அடைகின்ற அதே வேளை, "கம்பன் கழகம்" எனும் தன்னிகரற்ற கட்டமைப்பின் நற் பெயரையும் பெருமையையும் பாதுகாத்து வளர்க்கும் தலையாய கடப்பாடும் இருப்பதை உணர்ந்து நிற்கின்றேன்.

கன்னித்தமிழ் வளர்க்கும் கழகத்தின் கன்னிச் செய்தி மடலின் ஊடாக உங்களைச் சந்திக்கும் இவ்வேளையில், எம் கழகத்தின் செயற்பாடுகள் பற்றியும் இவ்வாண்டிற்கான எமது நிகழ்வுகள் பற்றியும் உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன். இச்செய்தி மடல்களினூடாக, எம் கழக இளைஞர்களின் எழுத்தாக்கங்களை ஊக்குவிக்கவும் உளம் கொண்டுள்ளோம். அவுஸ்திரேலியாவாழ் எம் தமிழ் உறவுகளாகிய உங்களது அன்பும் ஆதரவும் கடந்த பதின்மூன்று வருடங்களாகக் கழகத்திற்கு கிடைத்தமை பெரும் வரப்பிரசாதம் ஆகும். இத்தருணத்தில், தொடர்ந்தும் உங்கள் ஆதரவினை நன்றியுடன் வேண்டி நிற்கின்றோம்.

சண்ஜீவன் குணரட்ணம், தலைவர்,
அவுஸ்திரேலியக் கம்பன் கழகம்

அவுஸ்திரேலியக் கம்பன் கழக செயற்குழு **2019/20**
Kamban Kazhagam Australia Inc. - Board Members 2019/20
Seated L-R:
Ms. Poorvaja Nirmaleswara Kurukkal (Vice President),
Mr. Shanjievan Gunaratnam (President),
Mr. Jeiram Jegathesan (Founder & Chairman),
Mrs. Neshevida Ashwin Balasubramanian (Secretary),
Mr. Vithuran Jegatheeswaran (Treasurer).

Standing L-R:
Mr. Mylon Rajan (Assist. Treasurer),
Mr. Krishna Kumar (Committee Member),
Mr. Arooran Manickavasagar (Committee Member)

Absentees:
Technical Director - Sutharshan Thirunavukarasu,
Joint Secretary - Mrs. Suvadika Prithiviraj,
Committee Member - Mrs. Shivanie Dheeraj.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Aadal Velvi – 2018 (Oct 27th)

We are pleased to share that 2018, marked our first ever "Aadal Velvi".

"Aadal Velvi", as the name suggests, is a celebration of Indian Classical dance. We are humbled to note that we commenced this initiative with esteemed and highly sought-after Bharathanatya dancer, **'Nrityachoodamani' Priyadarsini Govind.**

Through the Aadal Velvi initiative, Smt. Priyadarsini Govind performed live in Sydney, in Melbourne (through our tour partners Nadanalaya Academy) and conducted several open/closed workshops for over a hundred senior dancers in Sydney and Melbourne. Kazhagam was proud in bestowing Smt. Priyadarsini Govind with "Aadal Arasi" award.

Although this was our first attempt in staging a dance-orientated event, the boundless support of our sponsors, tour partners, volunteers and audience made this an enriching experience through and through.

Poorvaja Nirmaleswara-Kurukkal
Vice President, Kamban Kazhagam Australia Inc.

Pongal Festival 2019 – Youth Speaker Events

-Bhuvan Senthil & Puraathani Kirupaharan-

In 2019, a team from the Kamban Kazhagam youth wing, comprising of; Bhuvan Senthil, Puraathani Kirupaharan, Keasavi Vignarajah, Janathini Kumarakuruparan, Abeza Poopalasingam and Sinthujan Gnana Moorthy were invited to, and presented at the State and Federal Parliament as well as the Parramatta Council Thai Pongal festivals. These students explained the Thai Pongal festival to the Members of Parliament while also using this opportunity to share with them information about our amazing poets, such Bharathiyar. The youth speakers received an incredibly warm response from the Members of Parliament, particularly in their request to celebrate already in place National Agriculture Day (Nov 21st). Similar to Thai Pongal, it should be celebrated nationally including Australian farmers as part of it.

2019ஆம் ஆண்டில் நடைபெற்ற மாநில மற்றும் தேசிய பாராளுமன்றப் பொங்கள் விழாக்களிலும், CMRCயின் பரமட்டா பொங்கல் விழாவிலும், எமது கழகத்தைச் சார்ந்த இளைஞர்களாகிய புவன் செந்தில், புராதனி கிருபாகரன், சிந்துஜன் ஞானமூர்த்தி, ஜனாதினி குமரகுருபரன், கேசவி விக்னராஜா, அபிஷா பூபாலசிங்கம் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர். இம்மாணவர்கள் தைப்பொங்கலைப் பற்றியும், அதன் மேன்மை பற்றியும், பாராளுமன்ற உறுப்பினர்களோடு பகிர்ந்துகொண்டனர். மேலும், நமது மொழியின் சிறந்த புலவர்களில் ஒருவரான, பாரதியாரைப் பற்றியும் இவர்கள் பேசியிருந்தார்கள். இதைவிட முக்கியமாக, அவுஸ்திரேலியாவில் தமிழர்களின் தைப்பொங்கலைப் போல, உழவர்களிற்கு நன்றி தெரிவிக்கும் விழாவையும் கொண்டாட வேண்டும் (அவுஸ்திரேலியத் தேசிய உழவர் தினம் -நவ21) என்ற கோரிக்கையையும் இம்மாணவர்கள் முன் வைத்திருந்தனர்.

படைப்பிலக்கியத் தேடல் - 2019

- ஜனார்த்தன் குமரகுருபரன்-

புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும், தமிழ் மக்கள் தத்தமது திறமைகளை, அவரவரைச் சார்ந்த வாழ்விடங்களில் வெளிப்படுத்தி வருகின்றார்கள். அவுஸ்திரேலியக் கண்டத்தைப் பொறுத்தவரை, அதன் அனைத்து மாநிலங்களிலும் பரவி வாழ்கின்ற தமிழர்களின் மத்தியிலிருக்கும் பல திறமைசாலிகளின் சாதனைகள், அவரவர் வாழ்விடங்களைத் தாண்டி, மாநிலம் தாண்டி, நாடெங்கும் பரவும் வகை செய்தல் வேண்டும். அவ்வகையில், அவுஸ்திரேலியக் கம்பன் கழகத்தின் இளைஞர் குழுவொன்று அவுஸ்திரேலியா வாழ் தமிழ் எழுத்தாளர்களின் விபரங்களை ஆவணப்படுத்தும் முயற்சியில் 2016ஆம் ஆண்டு காலடி எடுத்து வைத்தது. 2018வரை அவுஸ்திரேலியா முழுவதுமாக சுமார் 70 எழுத்தாளர்களை இத்திட்டத்தின் மூலம் அடையாளப்படுத்த முடிந்தது. ஒவ்வொரு வருடமும் இவ்வெண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது. இந்த எண்ணிக்கை மென்மேலும் வளர, தமிழ் மக்கள்- குறிப்பாக ஆர்வமிக்க வாசகர்களும், எழுத்தாளர்களும்- எமக்குப் பக்க பலமாக இருந்து வருகின்றனர். அவர்களுக்கு எம்முதற்கண் நன்றி-களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம். அவுஸ்திரேலியத் தமிழ்ப் படைப்பிலக்கிய வாதிகளுக்கான தேடல் இவ்வருடமும் தொட உங்கள் ஒத்துழைப்பை நாடி நிற்கின்றோம்.

தொடர்புகளுக்கு: ஆனந்தன் - 0415 984 324.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Kamban Kids Class

-Prenitha Balasubramanian-

Held weekly at the Kurrajong Room in the Wentworthville Community Centre, the Kamban kids class is a fun and interactive class that allows children to immerse themselves in world of Tamil literature. The renowned Tamil epic, Kamba Ramayanam is the core text that is taught in these classes. Through storytelling, its transcending morals and values are explored and discussed. In addition to this, other literary texts such as Thirukkural, Aathisoodi, Kondraiventhan, Moothurai, Puthiya Aathisoodi are also simultaneously imparted through games and activities. However, our students' learning is not just limited to the classroom. Each year, some children are given an opportunity to perform as a group at the annual Kamban Vizha. Over the past 4 years, students have done speeches, performed songs and have even acted. This has not only facilitated children develop their Tamil literary and language knowledge but has also helped them develop other skills such as public speaking, teamwork, acting etc. Moreover, we are proud to acknowledge the achievements of the children who attend the Kamban kids class.

In 2017:
Sachin Kanagasundaram
received the NSW Minister's Commended Award (Excellence in Student Achievement Tamil Language).

In 2018:
Asvetha Senthilkumaran
participated in an International Tamil Speech Competition, "Anaithulaga Maanavar Muzhakkam " in Singapore, where she represented Australia. She reached the quarter finals.

In 2018:
Shalini Kanagasundaram
received NSW Minister's Highly Commended Award (Excellence in Student Achievement Tamil Language).

In 2018:
Amirthan Thiruarrenkan
received NSW Minister's Highly Commended Award (Excellence in Student Achievement Tamil Language).

Achievements both internal and external to these classes are inspiration for all our students attending and we hope to see more achievements for 2019.

இளைஞர்களின் கம்பன் வகுப்பு -கிருஷ்ணஹம்சி ஏகாம்பரம்-
"அறத்தான் வருவதே இன்பம்"

தமிழ் இலக்கியங்களினூடு அறநெறியைக் கற்றலே இவ்வகுப்பின் முக்கிய நோக்கமாகும். நாங்கள், கம்பராமாயணத்தில் இருக்கும் ஒவ்வொரு பாடல்களையும் பிரித்தாய்வு செய்து, அதில் உள்ள சொல் மற்றும் சொற்றொடர்களின் கருத்துகளைத் தெளிவாகக் கற்றுக் கொள்கிறோம். இதன்மூலம், எங்கள் தமிழ்ச் சொல்வளம் அதிகரிப்பதோடு மட்டுமின்றி, கவிதைகளின் நுணுக்கங்களையும் பல அருமையான வியக்க வைக்கும் உவமைகளையும் கற்றுக்கொள்ளக் கூடியதாகவுள்ளது. கம்பராமாயணம் மட்டுமன்றி, பல்வேறு தொன்மையான இலக்கண இலக்கிய மற்றும் அறநெறி நூல்களையும் - உதாரணத்திற்கு, திருக்குறள், தொல்காப்பியம், அகநானூறு, புறநானூறு போன்றவற்றை- ஆழமாகக் கற்றும் இரசித்தும் வருகின்றோம். இத்தோடு, தமிழ் அறிஞர்கள் பலரும் நம் வகுப்பிற்கு வருகை தருவதோடு மட்டுமன்றி, அவர்களே வகுப்பை நடத்தியும் இருக்கிறார்கள். இவ்வாறு, இலங்கை, இந்தியா மற்றும் அவுஸ்திரேலியாவில் இருக்கும் அறிஞர்கள், சிறப்பு விருந்தினராய் வந்து எம்மோடு அவர்களது தமிழ் அறிவைப் பகிர்ந்து கொள்வது எமக்குக் கிடைத்த அரிய சந்தர்ப்பம். தமிழ் இலக்கண-இலக்கியங்களில் உள்ள ஆழ்ந்த கருத்துகளை அவர்கள் எங்களுக்குக் கற்பிப்பதன் மூலம், எங்களது தமிழ் அறிவு வளர்வது மட்டுமன்றி, "கற்றது கை மண்ணளவு கல்லாதது உலகளவு" என்பதை மீண்டும் மீண்டும் எமக்கு உணரச்செய்கிறார்கள். இவ்வகுப்பில் பங்கேற்பதனால், தமிழைப் பற்றியும் தமிழர் வரலாற்றைப் பற்றியும், எங்களால் விளக்கமாக அறியக்கூடியதாய் உள்ளது. தமிழை உயர்தரப் பாடங்களில் ஒன்றாக எடுக்கவிருக்கும் மாணவர்களுக்கும், தொடர்ந்து கற்க விரும்புபவர்க்கும் மிகவும் பயனுள்ள வகுப்பு இது. ஒரு குவளை தேநீருடன், அரிய அறிவையும் அருந்தும் சந்தர்ப்பம், கம்பன் வகுப்பு! ஞாயிற்றுக் கிழமை காலைகளில் 7.30 மணி முதல் - 9.15 மணிவரை இக் கம்பன் வகுப்பு நடைபெறுகின்றது. தொண்டுரீதியாக நடாத்தப்படும் இவ்வகுப்பில் சேர விரும்புகின்றவர்கள் **ஆசிரியர் ஜெய்ராம் ஜெகதீசன் அவர்களைத் தொடர்பு கொள்க: 0432 796 424**

Clean up Australia Day 2019

We are proud to say that Kamban Kazhagam Australia has made a contribution to clean up Australia Day for the third year in a row. This year members of our organisation united to clean up the Lytton Park, in Wentworthville area on Sunday 3 March 2019. This day is an important one for our organisation to take time to show that we care about our community and maintaining a clean environment for us all to live in for generations to come. It is also a unique opportunity to bring together our members of all ages and show that we can be leaders through our small but considered and meaningful actions.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பன் கழகம் பெருமையுடன் வழங்கும்

உயர் மாருதி விருது மற்றும் சான்றோர் விருது

"உயர் மாருதி விருது' என்பது தமிழ் மொழியினதும் தமிழ்ச் சமுதாயத்தினதும் உயர்வுக்காக அவுஸ்திரேலிய மண்ணில் அல்லது அவுஸ்திரேலிய மண்ணிலிருந்து, தன்னலமற்ற சேவையாற்றிவரும் ஒரு தமிழரை இனம்கண்டு அவரைக் கௌரவிக்கும் வண்ணம் வழங்கப்படும் விருதாகும்.

இவ்விருது 2012ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. அவுஸ்திரேலியாவாழ் தமிழ் மக்களிடம் இருந்து பெறப்படும் பரிந்துரைகளின் அடிப்படையில், இவ் விருதுக்கான தேர்வு நடைபெறுகின்றது. தேர்வு செய்யப்படுபவர், சிட்னி நகரில் நடைபெறும் அவ்வாண்டுக் கம்பன் விழாவில் "உயர் மாருதி விருது" வழங்கப்பட்டுச் சிறப்பிக்கப்படுகிறார்.

இதுவரை மாருதி விருதை பெற்றவர்கள்:

2012: வைரமுத்து மனோமோகன் (இதய மருத்துவ நிபுணர், சிட்னி)
2013: சிசு நாகேந்திரன் (நாடகக் கலைஞர், மெல்பேர்ன்)
2014: நா. மகேசன் (எழுத்தாளர், நாடகக் கலைஞர், சமூக சேவையாளர், சிட்னி)
2015: கந்தசாமி நல்லசிவம் (சமூக சேவையாளர், பேர்த், மேற்கு அவுஸ்திரேலியா)
2016: க. நடனச்சந்திரன் (மூளை நரம்பியல் நிபுணர், கன்பரா - சிட்னி)
2017: வழங்கப்படவில்லை.
2018: ஜெயசிங்கம் ஜெயமோகன் (புற்றுநோய் கதிரியக்கச் சிகிச்சை நிபுணர், சமூக சேவையாளர், சிட்னி)

அவுஸ்திரேலியக் கம்பன் கழகம் ஆண்டு தோறும் உயர் மாருதி விருதுடன், நான்கு சான்றோர் விருதுகளையும் தகுதியுடையவர்களுக்கு வழங்கி வருகிறது.
இதுவரை சான்றோர் விருது பெற்றவர்கள்

2012
கலாநிதி பொன். பூலோகசிங்கம்
எஸ். பரம் தில்லைராஜா
எஸ். பொன்னுத்துரை
மருத்துவ கலாநிதி பொன். சத்தியநாதன்

2013
"மிருதங்க வித்துவான்" ஆ. சந்தானகிருஷ்ணன்
கவிஞர் இ. அம்பிகைபாகர்
திருமதி பாலம் இலட்சுமணன்
ஓவியர் ஆசைப்பிள்ளை ஞானசேகரம்

2014
திருமதி இராஜேஸ்வரி சந்திரசேகரம்
சட்ட அறிஞர் சிவானந்தன்
திருமதி. பத்மாவதி அருமைநாயகம்
மருத்துவர் ஆர். எஸ். முத்துக்கிருஷ்ணன்

2015
திருமதி புஷ்பராணி தங்கராஜா
மருத்துவர் "மறையூர்" சுந்தரேச இராமநாதன்
இலகுப்பிள்ளை விஜயரத்தினம்
செல்லையா வேலுப்பிள்ளை

2016
கலாநிதி திருமதி ஞானா குலேந்திரன்
கலாநிதி கந்தையா கணேசலிங்கம்
பல் வைத்திய கலாநிதி இளமுருகனார் பாரதி
மகாதேவஜயர் ஜெயராமசர்மா

2017
அன்பு ஜெயா
செல்வரத்தினம் ஜெயேந்திரகுமார்
மயில்வாகனம் தனபாலசிங்கம்
மருத்துவ கலாநிதி
அப்புப்பிள்ளை பாலசுப்ரமணியம் OAM

2018
வண. நிர்மலேஸ்வரக் குருக்கள்
மதியாபரணம் ரவிச்சந்திரா OAM
இரத்தினசபாபதி சுதந்திரராஜ்

SAVE THE DATES!

Kamban Kazhagam Australia is so excited to announce the following upcoming events in 2019.
Please ensure you save the dates for what promise to be very exciting events!

26 May
Vellum Sol
Youth Impromptu Speech Competition,
Little Stars, Metella Road, Toongabbie.

4 August
Isai Velvi
featuring the world renowned singer Sid Sriram,
Sydney Bahai Centre

12 & 13 October
Annual Kamban Tamil Literary Festival
featuring local and international speakers,
Wentworthville Redgum Centre

14-16 October
Gnana Velvi
featuring in depth enlightening speeches from Kambavarithi E. Jeyaraj,
Wentworthville Redgum Centre

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org